# <u>அறிவித்தல்</u>

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் 2019(2020)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக 2019(2020) ஆட்சேர்ப்பு அறிவித்தலின் பிரகாரம் பாடங்களுக்கமைய தகுதி பெற்ற அனைத்து விண்ணப்பதாரர்களதும் பெயர்கள் ஆங்கில அகரவரிசைப்படி கீழே தரப்பட்டுள்ளது.

இவ் ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் திகதி மற்றும் அதற்குரிய ஏனைய விபரங்கள் எதிர்வரும் நாட்களில் இவ் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படவுள்ளது.

இப் பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல்/ பொது நேர்முகப் பரீட்சைக்கு தகுதி பெற்றிருத்தல் மாத்திரம் நியமனம் பெற்றுக் கொள்வதற்கான தகுதியல்ல.

இங்கு இணைப்பு *01* ஆக தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை பொது நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சை சபையினரிடம் சமர்ப்பிப்பது கட்டாயம் என்பதுடன், அப் படிவம் உரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பொது நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டிய இப் படிவத்தை பின்னராக சமர்ப்பிக்கும் பட்சத்தில் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதால், அதனை இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து துரிதமாக பூரணப்படுத்திக் கொள்வது விண்ணப்பதாரர்களது பொறுப்பாகும்.